## 26. அத்தி மன்னன் கதை

அத்தி என்பவன் திங்களின் குலத்தில் தோன்றிய ஓர் அரசன். இவனுடைய தந்தையின் பெயர் சுகோத்திரன். இவன் எல்லா நலங்களும் இனிதமையப்



பெற்றவனாய்த்திகழ்ந்தான். புதிய நகரம் ஒன்றைப் பொற்புடன் அமைத் தான். அந்நகர் இவனுடைய பெயரால் அத்தினாபுரம் என்று அழைக்கப்பட்டது. அந்நகரில் அமர்ந்து அத்தி மன்னன் அரசாட்சி செய்தான். அத்திமன்னன் குடிகளாற்காண்டற்கு எளியனாய்த் திகழ்ந்தான். தனக்குச் சினமுண்டாக்கியவர்களிடங்கூட இவன் கடுஞ்சொல்இயம்பமாட்டான். குடிகளின் குறை யைத் தன் குறைபோல் எண்ணி நாளுஞ் சிறப்புடன் அரசாட்சிசெய்துகொண்டிருந்தான். பாண்டவர் முதலி யோர் ஈண்டிய புகழுடைய இவன் வழிமுறையில்தான் தோன்றினர். இவனுடைய புகழ் எண்டிசையும் மண்டி நின்றது. சிறந்த அரசர்களுக்கு இவன் ஓர் எடுத்துக் காட் டாகத்திகழ்ந்தான்.

[சிறந்த அரசன்] (பாரதம்)